

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.8.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற ஒன்றிய மாநில உறவுகள் குறித்த தேசிய கருத்தரங்கத்தில் கலந்து கொண்டு ஒன்றிய மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழுவின் இணையதளத்தை தொடங்கி வைத்து, இந்தியாவில் உள்ள அனைவரும் கருத்துகளை பகிர்ந்துக் கொள்ளும் வகையில் இணையவழி வினாத்தாள் படிவத்தினையும் வெளியிட்டார். இக்கருத்தரங்கில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதியும், ஒன்றிய மாநில உறவுகள் குறித்த உயர்நிலை குழு தலைவருமான நீதியரசர் குரியன் ஜோசப், முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி ஜஸ்டிஸ் செலமேஸ்வர், முன்னாள் டெல்லி உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஏ.பி. ஷா, கேரள மாநில முன்னாள் அமைச்சர் தாமஸ் ஐசக், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், உள்ளிட்ட அரசு செயலாளர்கள், ஒன்றிய மாநில உறவுகள் குறித்த உயர்நிலை குழு உறுப்பினர்கள் அசோக் வர்தன் ஷெட்டி, (ஓய்வு), டாக்டர் நாகநாதன், அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர்கள், அரசு வழக்கறிஞர்கள், சட்டத்துறை வல்லுநர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.8.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளைச் சந்திக்கும் நிகழ்வில், திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாகச் சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.

# எதிர்க்கட்சிகள் ஆளும் மாநில அரசுகளுக்கு ஒன்றிய அரசு தொடர்ந்து தொல்லைகளை ஏற்படுத்தி வருகிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

● 1969ஆம் ஆண்டு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நீதியரசர் ராஜமன்னார் தலைமையில் ஒரு குழுவை அமைத்தார்.

● ஒன்றிய – மாநில உறவுகளைச் சீராய்வு செய்து 1971, மே 27ல் ராஜமன்னார் குழு தனது வரலாற்றுச் சிறப்புமிக்க அறிக்கையை தமிழ்நாடு அரசிடம் அளித்தது.

● அந்த அறிக்கையை அடிப்படையாக வைத்து, 1974 ஏப்ரல் 14ஆம் நாள் மாநில சுயாட்சித் தீர்மானத்தை தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றினார் முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள். அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கு, ஒரு மடல் எழுதி, மாநில சுயாட்சித் தீர்மானத்தையும் இணைத்து, ஒன்றிய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

● இன்றைக்கும் ராஜமன்னார் குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு பரிந்துரைகள் மிகவும் போற்றத்தக்கவையாகவும், நடைமுறைப்படுத்த வேண்டிய நிலையிலும் இருக்கிறது.

● தமிழ்நாடு, மேற்கு வங்கம், கர்நாடகா, கேரளா, ஆந்திரா, தெலங்கானா, பஞ்சாப், ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களில் பா.ஜ.க. அல்லாத கட்சிகளின் தலைமையில், ஆட்சி நடைபெறுகிறது.

### காஷ்மீரில் கூட்டாட்சியியலுக்கு எதிரான நடவடிக்கைகள்!

இந்தப் பட்டியலில் காஷ்மீரும் ஒரு மாநிலமாக இருந்திருக்க வேண்டும். ஆனால், ஒன்றிய அரசு அரசமைப்புச் சட்ட விதிகளை மீறி, தன்னிச்சையாக, காஷ்மீரில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு, ஆளுநர் ஆட்சிக்காலத்தில் காஷ்மீர் மாநிலத்தை ஒன்றிய அரசின் நேரடியான ஆட்சிக்கு உட்பட்ட ஒரு பகுதியாக மாற்றி அறிவித்தார்கள். இத்தகைய ஜனநாயக விரோத, கூட்டாட்சியியலுக்கு எதிரான நடவடிக்கைளை திராவிட முன்னேற்றக் கழகமும், எங்களோடு இணைந்திருக்கின்ற காங்கிரஸ், ம.தி.மு.க. விடுதலைச் சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய யூனியன் முசுலீம் லீக் என்று அனைத்துக் கட்சிகளும் இணைந்து கண்டித்தோம்.

**இது போன்ற நிலை தொடரக் கூடாது; மாநிலங்களுடைய உரிமைகள் தொடர்ந்து பறிக்கப்படக்கூடாது என்ற உணர்வில்தான், மீண்டும், கடந்த 50 ஆண்டுகளில் கூட்டாட்சிக்கு எதிராக நடைபெற்ற நிகழ்வுகளை ஆய்ந்து, உரிய அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை மேற்கொள்வதற்கு உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர் மாண்புமிகு குரியன் ஜோசப் தலைமையில் ஒரு உயர்நிலைக் குழுவை நியமித்திருக்கிறோம்.**

1983ல் கர்நாடக மாநிலத்தில் நடைபெற்ற தென்னிந்திய மாநிலங்களின் முதல்வர்கள் மாநாட்டைத் தொடர்ந்து, அன்றைய ஒன்றிய அரசு, உச்ச நீதிமன்ற மேனாள் நீதியரசர் சர்க்காரியா தலைமையில் 1983ல் ஒரு குழு அமைத்தது.

### ஒன்றிய அரசிடம் அளவுக்கு மீறிய அதிகாரக் குவியல்கள்!

**நீதியரசர் சர்க்காரியா குழு, 1988ல் தன்னுடைய அறிக்கையை வெளியிட்டது. இந்த ஆணையத்தின் அறிக்கையில் ஒரே ஒரு இடத்தில் மாநிலங்களுக்கு ஆதரவாக என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், “இந்தியா வில் பொதுவாக பெருமளவில் அதிகாரக் குவிப்பு நடைபெற்று வருகிறது. இதைத் தடுப்பதற்குப் பயனுள்ள வகையிலும், மன சாட்சியுடனும் எல்லா நேரங்களிலும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அளவுக்கு மீறிய அதிகாரக் குவியல்களால் ஒன்றிய அரசுக்கு இரத்தக் கொதிப்பும், மாநில அரசுகளுக்கு இரத்தச் சோகையும் ஏற்பட்டுள்ளது.**

**இதன் விளைவு என்னவெனில், நோயுற்ற தன்மையும், திறமையின்மையும்தான் இதன் வெளிப்பாடாக உள்ளது. உண்மையில் அதிகாரக்குவியல், மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்ப தற்குப் பதிலாக அதிகப்படுத்துகிறது என்று அந்த அறிக்கையில் இருக்கிறது.**

சர்க்காரியா ஆணையம் குறிப்பிட்ட இந்தக் கருத்துக்கு ஏற்ப மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் வகையில், இந்த ஆணையம் அரசமைப்புச் சட்டத் திருத்தங்களை மேற்கொள்வதற்கு உரிய பரிந்துரைகளைச் செய்யவில்லை என்பதையும், நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

### ஆளுநர்கள் நியமனம்! ‘‘புஞ்சி ஆணையம்’’ பரிந்துரை!

சர்க்காரியா ஆணையத்தின் அறிக்கை வெளி வந்த பிறகும், நாடாளுமன்றத்தில் பல சட்டங்களின் வழியாகவும், அரசமைப்புச் சட்டத்திருத்தங்கள் வழியாகவும், ஒன்றிய அரசிடம் பல அதிகாரங்கள் தொடர்ந்து குவிக்கப்பட்டு வருகிறது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில், மாநிலங்களின் உரிமைகளை நிலைநிறுத்த ஆய்வுக் குழு அமைக்கவேண்டும் என்று தி.மு.க. வலியுறுத்தியதைத் தொடர்ந்து – 2007ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதியரசர் புஞ்சி அவர்களின் தலைமையில் ஒரு ஆணையம் அமைக்கப்பட்டது. இந்த ஆணையத்தின் பரிந்துரைகளில் மிக முக்கியமானது; ஆளுநரை எப்படி நியமனம் செய்யவேண்டும் என்பதுதான்! கட்சி சார்பற்ற முறையில், நடுநிலையாகச் செயல்படக் கூடிய சிறந்த வர்களாகத் தேர்ந்தெடுத்து அந்தந்த மாநில முதலமைச்சர்களிடம் கலந்தாலோசித்து ஒன்றிய அரசு நியமனம் செய்யவேண்டும் என்று “புஞ்சி ஆணையம்” தனது பரிந்துரையை வழங்கியது.

இந்த ஒரு ஆலோசனையைக் கூட ஒன்றிய அரசு இன்றுவரை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை தமிழ் நாட்டில் தற்போதைய ஆளுநரின் செயல்பாடுகளை வைத்தே நாம் தெரிந்து கொள்ள முடியும். இதுபோன்ற எண்ணற்ற சட்டக்குறுக்கீடுகள், நிருவாகக் குறுக்கீடுகள் வழியாகவும், பா.ஜ.க. அல்லாத எதிர்க்கட்சிகள் ஆளும் மாநில அரசுகளுக்குத் தொடர்ந்து தொல்லை தரும் வகையில் பல தடைகளை ஒன்றிய அரசு ஏற்படுத்தி வருகிறது.

### நிதிப் பற்றாக்குறையிலும் இரட்டை இலக்க வளர்ச்சி!

நிதி ஆணையங்கள் சுதந்திரமாகச் செயல்படுவதையும் ஒன்றிய அரசு தடுக்கின்றது. மாநிலங்களுக்கு அளிக்க வேண்டிய உரிய, நியாயமான நிதிப் பங்கீட்டை மறுக்கின்றது. இதையெல்லாம் மீறி, கடந்த 4 ஆண்டுகளாக திராவிட மாடல் அரசு, பல சிறந்த திட்டங்களை வகுத்து, நிறைவேற்றி வருகிறது. நிதிப்பற்றாக்குறை காலத்தில்கூட சிறந்த முறையில் நிதி மேலாண்மை செய்து 2024–25ஆம் ஆண்டில், 11.19 விழுக்காடு எனும் இரட்டை இலக்க வளர்ச்சியை 14 ஆண்டுகளுக்குப் பிறகு நாம் அடைந்திருக்கிறோம்!

நடுநிலை தவறாத நல்லெண்ணம் கொண்ட பல அறிஞர்களும், பொதுநல நோக்கர்களும், திராவிட மாடல் அரசின் சமூக நீதித் திட்டங்களைப் பாராட்டி வரவேற்கிறார்கள். இந்தி மொழியைத் திணிப்பதில் ஒன்றிய அரசு தீவிரம் காட்டி வருகிறது. ஆனாலும், பல்வேறு மொழிப் போராட்டக் களங்களை எதிர் கொண்டு, இந்தித் திணிப்பை தமிழ்நாடு முறியடித்திருக் கிறது. ஏராளமான அரசியல் தலைவர்கள், தமிழ் உணர் வாளர்கள் – மாணவர்கள் போராடி, கட்டாய இந்தியைத் தடுத்தார்கள்! அதனால்தான், 1968லேயே இருமொழிக் கொள்கையை முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் சட்டமன்றத் தீர்மானமாகவே நிறைவேற்றினார்.

### தமிழ்நாட்டின் இந்தி எதிர்ப்பு, மாநில உரிமை முழக்கம்!

தமிழ்நாட்டில் இருந்து எழுப்பப்படுகின்ற இந்தி ஆதிக்க எதிர்ப்பு, மாநில உரிமை முழக்கத்தை இப்போது இந்தியாவின் பல மாநிலங்கள் ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு வந்திருக்கிறார்கள். கர்நாடகா, மேற்கு வங்க மாநிலங்களில் இருமொழிக் கொள்கையை ஆதரித்து, குரல்கள் எழுப்புகிறார்கள்.

2025ல் மகாராஷ்டிரா மாநிலத்தில் உத்தவ் தாக்கரே, ராஜ் தாக்கரே இணைந்து இந்தி எதிர்ப்புப் பேரணியை நடத்தியதும், பா.ஜ.க., ஏக்னாத் ஷிண்டே கூட்டணி ஆட்சியின் பா.ஜ.க. முதலமைச்சர் பட்நாவிஸ் அவர்கள் மராட்டிய மாநிலத்தில் இந்தி கட்டாயம் கிடையாது என்று அறிவித்தார்.

**இது இந்திய அளவில் நடந்து கொண்டிருக்கின்ற மாபெரும் மாற்றம். மாநில உரிமைகளுக்காக தமிழ்நாடு தொடர்ந்து போராடி வருகிறது. இதற்காக திராவிட இயக்கச் சிந்தனையாளர்களான முரசொலி மாறன், கு.ச.ஆனந்தன், ஆலடி அருணா ஆகியோர் சிறந்த ஆய்வு நூல்களை எழுதியிருக்கிறார்கள்.**

### ஒன்றிய– மாநில உறவுகள் மேம்பட சீரிய கருத்துகள் வழங்கிடுவீர்!

திராவிட முன்னேற்றக் கழகமும் மக்கள் மன்றத்திலும், சட்டமன்றத்திலும் மாநில உரிமைகளை வென்றெடுக்க, அனைத்துவிதமான ஆக்கபூர்வமான, ஜனநாயக நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருகிறது. எனவே, மாநிலங்கள் சுயாட்சி பெற, தமிழ்நாடு அரசு ஏற்று நடத்தும் முதல் தேசிய அளவிலான கருத்தரங்கில் உரையாற்ற இருக்கக் கூடிய உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர்களும், சட்ட வல்லுநர்களும், பேராசிரியர்களும் ஒன்றிய – மாநில உறவுகள் மேம்பட தங்களுடைய சீரிய கருத்துகளை – வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

### புதிய கோணத்தில் சிந்தனையைத் தூண்டிய – நீதியரசர் செலமேஸ்வர் உரை!

இங்கே எனக்கு முன்னால் நம்முடைய முன்னாள் நீதியரசர் மாண்புமிகு ஜஸ்டி செலமேஸ்வர் அவர்கள் சிறப்பாக உரையாற்றி இருக்கிறார்கள். தற்போதுள்ள நீதித்துறை நடைமுறைகள், அரசுத் துறைகளின் நடைமுறைகளில் தன்னுடைய அனுபவத்திலிருந்து கருத்துக்களை எல்லாம் அவர் பகிர்ந்திருக்கிறார். அவருடைய உரை அனைவருக்கும் புதிய கோணத்திலான சிந்தனையை நிச்சயமாகத் தூண்டியிருக்கும். அதுபோல இன்று எல்லோருடைய உரையும் அமையும் என்று நம்புகிறேன்.

“மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி” என்ற கொள்கைத் திட்டம்தான் இந்தியாவின் பன்முகத் தன்மையையும், இந்தியாவின் ஒருமைப்பாட்டையும் மேலும் வலிமைப்படுத்தும்! அதற்கு, நம்முடைய உயர்நிலைக்குழு சிறந்த முறையில் பணியாற்றி வருகிறது.

### தேசத்தை உருவாக்கிய அரசமைப்புச் சட்டமே தேசத்தைவிட முதன்மையானது!

அதற்கு உதாரணம் இந்தக் குழுவின் தலைவர் நீதியரசர் மாண்புமிகு குரியன் அவர்கள் பேசும் போது, ஒரே வரியில் சிறப்பாகச் சொன்னார் – பலரும் சொல்லும், “தேசம் முதன்மை” என்பதைவிட “தேசத்தை உருவாக்கிய அரசமைப்பு சட்டமே முதன்மை” என்பதை தெளிவாகச் சொல்லிவிட்டார். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க குழுவில் அவருடன் இணைந்து பணியாற்றும் அசோக் வர்தன் ஷெட்டி அவர்களுக்கும், டாக்டர் நாகநாதன் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தக் குழு அளிக்கக்கூடிய பரிந்துரைகள், மாநிலங்கள் தன்னுரிமை பெற்று, ஒரு புதிய வலிமையான இந்தியா உருவாக வழிவகுக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

### மாநில சுயாட்சிக் கொள்கைக்கு அனைவரும் குரல் கொடுப்போம்!

தன்னிறைவு பெற்ற மாநிலங்களின் முயற்சியால்தான் ஒன்றுபட்ட இந்தியா வலிமை பெறும். பலவீனமான மாநிலங்களால் இந்தியாவை உயர்த்த முடியாது. எனவே, இந்திய ஒருமைப்பாட்டில் உண்மையான அக்கறை கொண்ட எல்லோரும் மாநில சுயாட்சிக் கொள்கைக்கு குரல் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**தமிழ்நாடு அரசு அமைத்த குழு போல இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களும் இதுபோல குழு அமைத்து, மாநில உரிமை முழக்கத்தை முன்னெடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் வலியுறுத்துகிறேன்.**

“மாநில சுயாட்சி” ஒன்றியத்தில் கூட்டாட்சி” எனும் விழுமியங்கள் கொண்டதாக இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தம் பெற நாம் அனைத்து வகைகளிலும் முயற்சி செய்வோம் என்று சொல்லி, நான் இந்த அளவோடு என் உரையை நிறைவுசெய்கிறேன்.

தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## நெல்லை மாவட்டத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்!

# 29,434 மனுக்கள் பெறப்பட்டு 12,523 மனுக்களுக்கு தீர்வு!

## நலத்திட்ட உதவிகளை வழங்கி அமைச்சர் கே.என்.நேரு தகவல்!

**நெல்லை, ஆக.24-**

**“நெல்லை மாவட்டத்தில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம் மூலம் 29,434 மனுக்கள் பெறப்பட்டு அதில் 12,523 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது என அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.**

நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் வருவாய்த் துறை செயலாளரிடம் தமிழ்நாட்டில் தகுதியான ஏழை, எளிய,மக்களுக்கு பட்டா வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டதன் அடிப்படையில்,நகர்புறங்களில் நீண்ட நாட்கள் குடியிருப்பவர்களுக்கும், இரண்டு சென்ட் பட்டா வழங்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி ரூபாய் 5.00 லட்சத்திற்கும் குறைவான மதிப்பு உள்ள நிலங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் அனுமதி பெற்று பட்டா வழங்கலாம்.ரூபாய் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட மனைகளுக்கு சென்னையில் உள்ள வருவாய்த்துறை செயலாளரிடம் அனுமதி பெற்று பட்டா வழங்கப்படும்.மேலும், கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு வருவாய்த் துறை, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வாயிலாக பட்டா வழங்கவும் அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு,தமிழ்நாடு முழுவதும் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருவதோடு,ஏற்கனவே பெறப்பட்ட பட்டாக்களுக்கு இபட்டா வழங்கப்பட்டு வருகிறது.



தமிழ்நாட்டில் 1.16 கோடி நபர்களு க்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.42 இலட்சம் முதியவர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.5 இலட்சம் மாணவர்களுக்கும் மற்றும் 9 இலட்சம் மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள 2.26 கோடி குடும்ப அட்டைதாரர்களின் ஒரு குடும்பத்திற்கு ஒரு நலத்திட்ட உதவி கிடைக்கும் வகையில் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை விடுப்பட்ட மகளிர்களுக்கு உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மனுக்கள் பெறப்பட்டு வருகிறது.பெறப்பட்ட மனுக்களை ஆராய்ந்து தகுதியான மகளிர் களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கிடைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம் இதுவரை 123 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.அதன் மூலம் 29434 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவற்றில் 12523 விண்ணப்பங்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டுள்ளது.முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு உங்களுக்கான அரசு, உங்கள் ஆதரவு என்றும் அவருக்கு இருக்க வேண்டும்

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பேசினார்.

முன்னதாக, பாளையங்கோட்டை பேருந்து நிலையம் அருகில் ரூ.5 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ள முதல்வர் படைப்பகம் கட்டுமானப் பணிகளுக்கு சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் அடிக்கல் நாட்டினார்கள்.

முதல்வர் படைப்பகம் கட்டித்தினை சுற்றிலும் பள்ளி மற்றும் கல்லூரிகள் உள்ளதால் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ/மாணவிகள், பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள மற்றும் ஏழை, எளிய மாணவ, மாணவிகள் மற்றும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்பவர்கள் இந்த முதல்வர் படைப்பகத்திலுள்ள புத்தகங்களை படித்து பயன்பெறும் வகையில் 1600 புத்தகங்கள் வைப்பதற்கான வசதியுடன் கட்டப்படவுள்ளது.

மேலும்,மின்புத்தக அறை வசதியும் உள்ளதால் மாணவ, மாணவியர்கள் கணினி வாயிலாகவும் புத்தகங்களை படித்து பயன் பெறுவதற்கு ஏதுவாகவும்,குழுவாக அமர்ந்து கலந்துரையாடி படிப்பதற்கு ஏதுவாகவும் 4 அறைகள் ஒவ்வொன்றும் 7 இருக்கைகள் கொண்டதாக அமைக்கப்படவுள்ளது.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.